# Gospel Truth
# காஸ்பல் ட்ரூத்

உலகளாவிய திருச்சபைகளின் ஊக்குவிப்பிற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 13 – INTERNATIONAL EDITOR : MICHAEL W.SMITH – இதழ் - 13


## பரிசேயன், ஆயக்காரன் பற்றிய உவமை

**பரிசேயன், வரிவசூலிப்பவன் ஆயக்காரன் பற்றிய உவமை** (கீழே விவரிக்கப்பட்டுள்ள உவமையானது லூக் 18:9-14 ம் வசனங்களில் இயேசு கூறியது)

**பின்னணி சூழல்**

பரிசேயர்கள் என்பவர்கள் யூதர்களிலே மிகவும் திரளான ஆஸ்தியுடைய பெரிய கூட்டத்தார். அவர்கள் மோசேயின் சகல நியாயப்பிரமாணங்களையும் கைக்கொண்டு நடப்பதில் உறுதியாய் இருப்பவர்கள். யூதர்களின் ஆராதனை முறைமைகளினின்று மாற்றியமைக்கப்பட்ட வேறுபடுத்தப்பட்ட பரிசுத்த, மாசற்ற கூட்டத்தார். நியாயப்பிரமாண விதிமுறைகளையும், கட்டளை களையும் மாத்திரம் அனுசரிப்பார்கள்.

தொடக்கத்தில் அவர்கள் தேவனை ஏற்றுக் கொண்டாலும், அவர்களில் பல பரிசேயர்கள் படிப்படியாக தேவஆவியையும், நோக்கத்தையும் இழந்து உள்ளான இருதய பரிசுத்தத்தைக் காட்டிலும் வெளிப்புற புறம்பான மாம்சீக பரிசுத்தத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கலாயினர்.

ஜனங்களிடையே பெரும் மதிப்பை பெறும்படி அவர்களுடைய ஆராதனையானது ஆடம்பரமாக இருக்கும்.பரிசேயர்களில் பலர் அகங்கார முள்ளவர்களாயும், சுயநீதியைக் கொண்டு மேன்மை பாராட்டுகிறவர்களாயும் தேவனை ஆராதிப்பார்கள். மற்றவர்களை ஏளனமாக எண்ணி அலட்சியம் செய்யும் குணம் கொண்டவர்கள். ஆயக்காரர்கள் வரிவசூலிப்பவர்கள். அவர்களும் யூதர்களே. ஆனால் அவர்கள்



தங்களை ஒடுக்கி ஆளும் ரோமர் களுக்காக வரிவசூல் செய்வதால் பரிசேயர்கள் இவர்களை துரோகிகள் என்று சொல்லி இழிவாகக் கருதுவார்கள். ஆயக்காரர்கள் வரிவசூல் செய்வதில் நியாயமற்ற, ஊழல்புரிகிறவர்களாக இருப்பார்கள்.

**உவமை :**

பரிசேயன், நீண்ட அங்கி தரித்தவனாய், ஜெபிக்கும்படி தேவாலயத்துக்குள் பிரவேசித்தான். ஆயக்காரனோ, தலை குனிந்தவனாய் உள்ளே பிரவேசிக்க துணியாமல் நின்று கொண்டிருந்தான். பாவமுள்ள ஆயக்காரனால் தேவாலயம் பரிசுத்தகுலைச்சலாகி விடும் என எண்ணி அவனை வெறுப்போடு பார்த்தான் பரிசேயன். ஆகவே அவனோடு கூட நடந்து வந்த ஆயக்காரன் தேவாலயத்துக்கு வெளியே தூரத்தில் நின்றுகொண்டு, தன் தலையை தாழ்த்தி ஜெபித்தான்.

ஆனால் உள்ளே பிரவேசித்த பரிசேயனோ தனியே நின்றுகொண்டு, தன் கைகளை உயர்த்தி, வானத்தை அண்ணாந்து பார்த்து, தன் விண்ணப்பங்கள் தேவசந்நிதியில் கேட்கப்படும்படி சத்தமாய் ஜெபித்தான்.

தேவனே நான் பறிகாரர், அநியாயக்காரர், விபச்சாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப் போலவும், இந்த ஆயக்காரனைப் போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன்; என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்தி வருகிறேன் என்று தனக்குள்ளே ஜெபம் பண்ணினான்.

இந்த இரண்டு பேரிலே, பரிசேயனாகிய மனிதன் அவனுடைய நல்லொழுக்கங் களையும், அவன் செய்த தர்மங்கள், சுயநீதியைக்குறித்து தன்னைத்தானே புகழ்ந்து


| தலையங்கம் | வேதாகம வழிகாட்டி | ஒருநோக்கு செய்தி | கேள்விக்கென்ன பதில் | உங்களுக்குத் தெரியுமா? |
|---|---|---|---|---|
| | சுயநீதி | சுயநீதி | | ஏற்றசமயத்தில் ஒரு வார்த்தை |
| பக்கம் - 3 | பக்கம் - 4 | பக்கம் - 5 - 6 | பக்கம் - 7 | பக்கம் - 8 |

# வேதாகமம்




## நமக்கு போதிப்பது என்ன.....

**தேவனுடைய வார்த்தை**
2தீமோ 3:16-17; 2பேது 1:20-21;
மத் 24:35

**அன்பு**
மத் 22:37-40; யோவா 14:21-23,
1 யோவா 4:7-11

**மனந்திரும்புதல்:**
அப் 3:19; 17:30; 2கொரி 7:10

**புதுசிருஷ்டி**
யோவா 3:3-7; 2கொரி 5:17; ரோம 6:1-4,
எபே 2:1,5-6

**பாவத்திலிருந்து விடுதலை**
1 யோவா 5:18; மத் 1:21; யோவா 8: 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**
அப் 1:8; 15:8-9; 19:2

**பரிசுத்தம்:**
லூக் 1:73-75; எபி 12:14; 1பேது 1:15-16;
தீத்து 2: 11-12; ரோம 6:22

**தேவனுடைய இராஜ்யம்**
லூக் 17:20-21; ரோம 14:17; யோவா 18:36.

**சபை-** அப் 2:47; எபே 4:4-6;
1கொரி 12:12-13; கொலோ 1:18

**ஒற்றுமை**
யோ 17 : 20-23; கலா 3:28;
வெளி 18:2-4

**நியமங்கள்**
மத் 28:19-20; 26:26-30;
1கொரி 11:23-27; யோவா 13:14-17

**தெய்வீக சுகமளிப்பு**
லூக் 4:18, ஏசா 53:4,5, யாக் 5:13-16

**விவாக முறைமை**
மத் 19:5-6; லூக் 16:18; ரோம 7:2-3;
1கொரி 7:10, 11

**வெளிப்புற தோற்றம்**
1தீமோ 2:9-10; 1கொரி 11:14-15;
உபா 22:5

**கடைசிகாலம்**
2பேது 3: 7-12; யோவா 5:28,29;
2கொரி 5:10; மத் 25:31-46

**தொழுதுகொள்ளுதல்**
யோவா 4: 23,24; எபே 5:19;
2கொரி 3:17

**சுவிசேஷம் அறிவித்தல்**
மாற் 16:15

மேன்மை பாராட்டி ஜெபித்தான். ஆனால் ஆயக்காரனோ இன்னொரு மூலையில், தூரத்தில் நின்றுகொண்டு தன் தலையை தாழ்த்தி, மிகவும் துயரம் நிறைந்தவனாய், அவன் செய்த பாவத்தினால் விசனப்பட்டு: ஜெபித்தான். மிக அதிகமான மனவிசனத்தினால் தன் மார்பிலே அடித்துக்கொண்டு புலம்பி அழுது மன்றாடினான். வேதனை நிறைந்த இருதயமும், நடுக்கத்தோடு அவன் செய்த ஜெபமும் மனுஷருக்கு கேட்கவில்லை. ஏனெனில் அவன் தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்று சொல்லி ஜெபித்தான்.

**பாடம்/ உவமையின் அர்த்தம்**
தன்னை நீதிமானாக எண்ணி, பிறரை தாழ்வாக நினைப்பவர்களுக்கு இதை உணர்த்தும்பொருட்டு இந்த உவமையை இயேசு கூறினார். அவனல்ல இவனே நீதிமானாக்கப்பட்டவனாய் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில் தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான். தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்.

பரிசேயன் நியாயப்பிரமாணத்தின் போதனைகளை பின்பற்றினாலும் பல நல்ல பழக்கங்கள் இருந்தது. ஆனாலும் அவன் இருதயம் பெருமையாய் காணப்பட்டது. அவன் ஆவிக்குரிய ரீதியிலே மற்றவர்களை விட தன்னை உயர்வாய் எண்ணினான். அவனுடைய நல்ல செயல்களும், பலிகளும் அவனை காப்பாற்றவில்லை. ஆனால் தன்னை தாழ்த்தி ஜெபித்த ஆயக்காரனோ தேவனிடத்திலே இரக்கத்தைக் கேட்டான். ஆகவே இவனே பாவம் மன்னிக்கப்பட்டவனாய் தேவகிருபையினால் இரட்சிக்கப்பட்டு திரும்பினான்.

தன்னை தாழ்த்தி, தன் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, தேவனோடு ஒப்புரவாகும்போது மாத்திரமே இரட்சிப்பை பெறஇயலும். நல்லொழுக்கமும், நீதிநெறிகளும், நற்கிரியைகளும் ஒருவருடைய இருதயத்தின் நீதியை வெளிப்படுத்தாது. இன்று சபையானது பாவம் நிறைந்த உலகத்தின் இம்மைக்குரிய செயல்பாடுகளிலிருந்து வேறுபட்டு தன்னை கறைபடுத்தாதவாறு திகழ்கிறது. ஆகவே அப்படிப்பட்ட தேவசபையின் ஜனங்கள், பரிசேயருடைய சுயநீதியின் ஆவியை விட்டுவிட்டு, மனத்தாழ்மையாய் நடக்க கற்றுக்கொள்ளுங்கள். எல்லா மேன்மையும், கனமும், மகிமையும் நமக்கல்ல. சகலமும் என்றென்றும் தேவாதி தேவனுக்கே!

## காஸ்பல் ட்ரூத்

*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம். கிறிஸ்துவின் நாட்கள் தொடங்கி அப்போஸ்தலர்கள் காலமட்டும் பிரசங்கித்து வந்த கிறிஸ்துவின் சத்தியத்தையே நாங்களும் இந்த இதழ் வாயிலாக அறிவிக்கிறோம்.*

*கர்த்தரின் வசனமே விசுவாசத்திற்கு ஊன்றுகோலாகும். அதுவே பாவமன்னிப்பின் நிச்சயத்தையும், இரட்சிப்பையும் நமக்குத் தருகிறது. பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலும், வல்லமையும், அனுதின வாழ்வின் பரிசுத்தமும் நம்மில் வளர வழி வகுக்கிறது. சத்தியத்தின்படி அன்பை போதித்து கர்த்தருக்குள் வழி நடத்த பிரயாசப்படுகிறோம்.*

## இணையதள சேவை

*எங்களுடைய இந்த இதழை ஆன்லைனில் படிக்க* **www.thegospeltruth.org** என்ற *இணையதள முகவரியை பார்க்கவும். மேலும் உங்களது* **E.mail** *மூலமாகவும் எங்களோடு தொடர்பு கொள்ளலாம். உங்களது நண்பர்கள் மற்றும் தெரிந்தவர்களுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.*

## தொடர்புக்கு

*தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள். தேவ சபையின் மூலமாய் நடைபெறும் அனைத்து வகையான ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். உங்களது கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம்.*

**ஆசிரியர். டபிள்யூ.எஸ்.வேதா, காஸ்பல் ட்ரூத், 2/227 கோலார்பட்டி**
**பொள்ளாச்சி வட்டம், தென் இந்தியா - 642 107**

# ஆசிரியரின் தலையங்கம்

மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார். நியாயஞ்செய்து, இரக்கத்தை சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார் – மீகா 6 : 8.

நம் இரட்சகருக்கு நாம் பட்ட கடனை ஒருபோதும் திருப்பிசெலுத்த இயலாது.ஒன்றுக்கும் உதவாத தகுதியற்ற நம்மையும் அவருடைய அன்பாலும் கருணையாலும் மன்னித்து ஏற்றுக்கொண்டார்.

வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மிக முக்கியமான போதனைகளில் ஒன்று மனத்தாழ்மை. தேவன் தம் பிள்ளைகள் ஒவ்வொருவருக்குள்ளும் தாழ்மை இருக்கவேண்டும் என விரும்புகிறார். ஆவிக்குரிய வேதசத்தியங்களை அளவில்லாமல் தெரிந்து வைத்திருக்கிற அநேகரிடத்திலே ஒருவிதமான ஆவிக்குரிய பெருமை உருவாகலாம். ஆனால் அது தவறு.மிகவும் வருந்தத்தக்கது.

இந்த இதழில் தியானிக்கும்படியாய் கர்த்தர் கொடுத்த வார்த்தை சுயநீதி.கடந்த பல இதழ்களில் நாம் படித்து, தெரிந்துகொண்ட உபதேசங்களினின்று சற்று வேறுபட்டது.ஆனால் மிக முக்கியமாக தெரிந்துகொள்ளவேண்டிய ஒன்று.ஒருவருக்குள் ஆவிக்குரிய மேட்டிமை தோன்றும்போது தேவராஜ்யத்தின் இம்மைக்குரிய ஆசீர்வாதங்களை மாத்திரமல்ல, மறுமைக்குரிய ஆசீர்வாதங்களையும் இழக்க நேரிடும்.

தங்களுடைய சுயபரிசுத்தத்தை உயர்த்திக்காட்டி வாழ்ந்த ஒரு கூட்ட ஜனங்களை நான் சிறுவனாய் இருக்கும்போது அறிந்திருக்கிறேன். அவர்களுடைய செயல்கள் யாவும் நாம் காணும்போது சரியானதாகத்தான் இருக்கும். ஆனால் உண்மையில் அவர்கள் கடுமையான, விமர்சனத்தின் ஆவியை தழுவி வாழ்கிறவர்கள்.

அவர்கள் தங்களுடைய சுயநீதியை உயர்த்திக் கண்பிப்பதே பிதாவினுடைய பரலோக பாக்கியத்திற்கான வழி என எண்ணி நடந்தார்கள். என்னுடைய தகப்பனார் எனக்கு உணர்த்தியது எனக்கு ஞாபகம் இருக்கிறது. இந்த சத்தியத்தை ஏற்றுக்கொண்டு தேவஅன்பை விட்டு விலகினால், நாம் அனைத்தையுமே இழந்து போக நேரிடும்.

தேவபிள்ளைகளாகிய நாம் தேவஅன்பிலும், தாழ்மையிலும் வளர்வதே முக்கியம். நம்முடைய சுயபலத்தை சார்ந்து வாழாமல் தேவநீதியில் நிலைத்திருக்க கடமைப்பட்டுள்ளோம்.

நான் பரிசுத்தவாழ்வு வாழும்பொருட்டு, தினமும் அவருடைய இரக்கத்திற்காக தேவனை சார்ந்துள்ளேன். நற்கிரியைகளில் நாட்டங்கொண்டு நற்கனி தரும் பிள்ளைகளாய் ஜீவிக்க வேண்டும். அந்த நற்செயல்கள் இரட்சிப்பு என்கிற நன்மைக்காக மாத்திரமல்ல, தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்துவதற்கேதுவாய் அது அமைய வேண்டும்.

நம்முடைய பேச்சு, போதனை, வாழ்க்கை மற்றும் நம் ஆவி அனைத்திலும் கிறிஸ்து இயேசுவே உயர்ந்திருக்க வேண்டும். நம்மை சுற்றியிருக்கும் சில ஜனங்கள் தங்களுடைய சொந்த பெலத்தையும், சிந்தனையையும் சார்ந்துகொண்டு, பெருமையுடனும், கர்வத்துடனும், ஆவிக்குரிய வாழ்க்கை வாழ்கின்றனர். தேவையில்லாத வழிகளிலே நடந்து அதை பாவம் என்று ஏற்றுக்கொள்ள தயங்குகிறவர்களுமுண்டு. சுயநீதி என்பது ஒரு நற்செயலல்ல.

கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அவர் உயர்த்தப்பட வேண்டும். பாவமன்னிப்பாகிய மீட்பையும், இரக்கத்தையும் நம்முடைய வல்லமையால் மனுக்குலத்திற்கு கொடுக்கமுடியாது. ஆனால் இப்பாவமனுக்குலத்திற்காக மரித்து உயிர்த்த நம் தேவனை உயர்த்த வேண்டும். உலகம் கிறிஸ்துவை அறிய வேண்டும்.அவருடைய நாமமே எப்போதும் உயர்த்தப்பட வேண்டும். அவரே நம் முழுமுதல் நம்பிக்கையின் பூரண வடிவம் ஆவார்.

ஆன்லைனில்

அதிகமாக
தெரிந்துகொள்ள

*www.thegospeltruth.org*

# வேதாகம வழிகாட்டி

**பொருள் : சுயநீதி**



**இவைகளை நீங்கள் செய்ய வேண்டும் (மத் 22 : 23- 24; லூக் 11 : 42 )**

வேதாகமத்தில் பல இடங்களில் இயேசு பரிசேயரைக் குறித்து குறிப்பிட்டு கூறியிருக்கிறார். இயேசுகிறிஸ்து அவர்கள் கடுமையாக பின்பற்றுகிற நியாயப்பிரமாணத்தை முற்றிலும்தடை செய்யவில்லை. ஆனால் அதைவிட பலமடங்கு முக்கியத்துவம் மிகுந்த நியாயத்தீர்ப்பு, இரக்கம், விசுவாசம், தேவஅன்பு இவைகளை ஏற்றுக்கொள்ளும்படி போதித்தார்.

அவைகளையும் நீங்கள் கைவிடாதிருக்க வேண்டும். இவைகளையும் செய்ய வேண்டும். பரிசேயர்கள் சில சடங்காச்சாரமான செய்கைகளை செய்து, மாம்சீக, அன்பற்ற ஆவிக்கு அடிமைப்பட்டுக் கிடந்தனர்.

சில ஜனங்கள் மருத்துவ ரீதியான உதவிகளில் தங்களின் சுயநீதியை கொண்டு வாழ்கின்றனர். சிலர் நவீனமான உலகத்திற்கு ஏற்ப உடை அணிவதில் தங்கள் சுயநீதியை நிலைநாட்ட முயற்சிக்கின்றனர்.

மற்ற சிலர் பிறருக்கு கொடுக்கிறதில் சுயநீதியை காட்டுகிறார்கள். இதே குணாதிசயங்களை கொண்ட இவர்களில் பலரில் கிறிஸ்துவின் தாழ்மையும், அன்பும் காணப்படுவதில்லை.

வெளித்தோற்றத்திற்கான கவனம் செலுத்துவதிலும், கீழ்ப்படித லுள்ளவர்களாயிருங்கள். மேலும் தேவ ஆவியானவரின் கட்டளைகளையும் விட்டுவிலகாதீர்கள்.

**வேத வாசிப்பு:** கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல – எபேசி : 8-9

**விளக்கம்:** இரட்சிப்பு நாம் சம்பாதித்ததல்ல. அது தேவனுடைய ஈவு.சகல கனமும் மகிமையும் எப்போதும் பிதாவாகிய தேவனுக்கே அல்லாமலும் ஒருபோதும் நமக்கோ அல்லது ஒருவர் சார்ந்துள்ள அமைப்பிற்கோ அல்ல.

**I.சுயநீதி கொண்ட ஜனங்களின் குணாதிசயங்கள்**

A. லூக் 10 : 29 அவன் தன்னை நீதிமான் என்று காண்பிக்க.

B. மத் 23 : 27-28 நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறீர்கள்; உள்ளத்திலோ மாயத்தினாலும் அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள்.

C. மத் 6 : 1-2 ஏழைகளுக்கு இரங்குதல்.

D. ரோம 10 : 1-3 தங்கள் சுயநீதியை நிலைநிறுத்த தேடுகிறார்கள்.

E. மத் 7 : 3-5 மற்றவர்களைக் குற்ற வாளிகளென்று தீர்க்காதிருங்கள்.

F. லூக் 7 : 39 கண்டனம் செய்தல்.

G. ஏசாயா 65 : 5, லூக் 18 : 9 உன்னைப்பார்க்கிலும் நான் பரிசுத்தன் என்று சொல்லுகிறார்கள்.

H. நீதி 20 : 6 மனுஷர் பெரும்பாலும் தங்கள் தயாளத்தைப் பிரசித்தப் படுத்துவார்கள்.

I. நீதி 30 : 12 தாங்கள் அழுக்கற கழுவப்படாமலிருந்தும் தங்கள் பார்வைக்கு சுத்தமாக தோன்றுகிற சந்ததியாருமுண்டு.

**II.நம்முடைய நீதி நியாயங்கள்**

A. லூக் 11 : 42-44 வெளிப்புற சுத்தம்.

B. ஏசாயா 64 : 6 அழுக்கான கந்தை போல.

C. ஏசாயா 57 : 12 அவைகள் உனக்கு உதவாது.

D. லூக் 16 : 15 தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது.

E. வெளி 3 : 16 -17 குருடர்கள்.

F. மத் 5 : 20 பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள்.

**III.உண்மையான நீதியும், நியாயமும்**

A. எபேசி 2 : 8-9 இது உங்களால் உண்டானதல்ல. இது தேவனுடைய ஈவு.

B. கலாத் 2 : 16 இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலேயன்றி நியாயப்பிரமாணத்தின் கிரியைகளி னாலல்ல.

C. தீத்து 3 : 5 கிரியையினாலல்ல, கிருபையினாலே.

**IV.தேவ மகிமையின் நோக்கம்**

A. ஏசாயா 42 : 8 என் மகிமையை வேறொருவனுக்கும் கொடேன்.

B. தானி 4 : 28 -31 நேபுகாத்நேச் சாரின் உதாரணம்.

C. 2கொரி 10 : 17-18 கர்த்தரைக் குறித்தே மேன்மை பாராட்டக்கடவன்.

D. மத் 5 : 16 உங்கள் நற்கிரியை களினாலே உங்கள் பிதா மகிமைப்பட வேண்டும்.

**முடிவு :**

மனுஷனுடைய வழியெல்லாம் அவன் பார்வைக்கு செம்மையாகத் தோன்றும் கர்த்தரோ இருதயங்களை நிறுத்துப் பார்க்கிறார். பலியிடுவதைப் பார்க்கிலும், நீதியும், நியாயமும் செய்வதே கர்த்தருக்குப் பிரியம். மேட்டிமையான பார்வையும், அகந்தையான மனமுமுள்ள துன்மார்க்கர் போடும் வெளிச்சம் பாவமே – நீதி 21 : 2-4.

# சுயநீதி

## ஒருநோக்கு வேதாகம செய்தி


**இரட்சிப்பு என்பது தேவன் அருளிய ஈவு**
ஒருவர் தேவனுடைய வார்த்தைக்கு உண்மையாய் கீழ்படிந்து தங்களை தாழ்த்தி, தம் பாவத்தை விட்டு மனந்திரும்பி தேவனோடு ஐக்கியப்படுகிறார்களோ அவர்களே இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றவர்கள். ஒருவருடைய சொந்த பெலத்தினாலோ, மன பலத்தினாலோ அல்லது திறமையினாலோ இரட்சிப்பை அடைய இயலாது. ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு அது கிரியைகளினால் உண்டானதல்ல(எபேசி 2 : 9). சுயநீதி என்பது ஒருவர் தன்னுடைய நம்பிக்கையிலும், நற்கிரியையிலும், கருத்துக்களிலும், செயல்களிலும் உறுதியாய் நீதியாய் இருந்து மற்றவர்களை குற்றவாளிகளென்று எண்ணுவார்கள்.

இவ்வாறு கருதி, பாவம் செய்கிறவர்களாகிறார்கள். பெயர்க்கிறிஸ்தவராய், சுயநீதியை உடைய ஒருவர் தன் சொந்த நற்கிரியைகளை நம்பியிருக்கிற தேவனுக்கு முன்பாக தங்களை பிழையற்றவர்களாய் இருக்க தகுதிபடுத்திகொள்ள வேண்டும். இயேசு இவ்வுலகில் ஊழியஞ்செய்யும்போது ஆவிக்குரிய மேட்டிமையையும், சுயநீதியையும் குறித்து அதிகமாய் சுட்டிக்காட்டி சென்றிருக்கிறார். பரிசேயருடைய புளித்தமாவைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்று கிறிஸ்து அறிவுறுத்தி சென்றிருக்கிறார்.

**பரிசுத்தம் என்பது கிறிஸ்துவாலும், ஆவியானவராலும் மாத்திரமே நமக்கு அருளப்பட்டிருக்கிறது**
எல்லாரும் பாவம் செய்து, தேவ மகிமையற்றவர்களாகி நின்றபோது நம்மை மீட்க நம் இரட்சகர் வந்தார். ஆகவே கிறிஸ்துவின் மூலமாக தான் இந்த மனுக்குலம் மீட்கப்பட்டு பரிசுத்த வாழ்வடைய முடியும். சகல கனமும், மேன்மையும், மகிமையும் பிதாவாகிய தேவனுக்கே. இங்கே நாம் பெருமையடைய இடமில்லை. அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார் கிறிஸ்துவுடனே கூட சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும் பிழைத்திருக்கிறேன், இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்(கலா 2 : 20). கிறிஸ்து இயேசுவினுடைய கிருபையும், அவருக்குள் வசிக்கும் பரிசுத்த ஆவியானவராலும் நமக்கு கிடைத்த அன்பின் ஈவே இரட்சிப்பு. ஆகவே நம்முடைய நோக்கமும், எண்ணமும் மனிதனையல்ல, கர்த்தராகிய தேவனுடைய வல்லமையை சார்ந்தே இருக்க வேண்டும்.


**சுயநீதியைக் காட்டும் ஆவியின் அடையாளங்கள்**
வேதாகமத்திலே இதற்கு பல சான்றுகள் உண்டு. தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் இந்த பாவத்தைக்குறித்து எச்சரிக்கையாயிருக்கவும், அதை வளரவிடாமல் தடுக்கவும் கடமைப்பட்டுள்ளனர்.

அவன் தன்னை நீதிமான் என்று காண்பிக்க மனதாய்...(லூக் 10:29) இயேசுவிடம் கூறினார். ஆகவே பரிசேயர்களாகிய இவர்கள் வெளிப்புற பரிசுத்தத்தை வலியுறுத்தும் கட்டளைகளையும், நியாயப்பிரமாணத்தையும் பின்பற்றி தன்னை நீதிமான் என்று காட்டிக்கொள்கிறார்கள். புறம்பே அலங்காரமாய்க் காணப்படும் உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினாலும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும் (மத் 23 : 27




மனுஷர் காண வேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் (மத் 6 : 1-2).

**சுயநீதியை நிலைநிறுத்த தேடுதல்**
இப்படிப்பட்டவர்களைக் குறித்து பவுல் அப்போஸ்தலன் கூறுகையில் அவர்கள் தேவநீதியை அறியாமல், தங்கள் சுயநீதியை நிலைநிறுத்த தேடுகிறபடியால் தேவநீதிக்குக் கீழ்ப்படியாதிருக்கிறார்கள் (ரோமர் 10 : 3). சுயநீதியானது தேவனுடைய வார்த்தையை நோக்காமல் அவனவனுடைய சொந்த வழிகளையும் கருத்துக்களையுமே பெரிதாக எண்ணி முக்கியத்துவம் கொடுக்கும்படியாய் தூண்டும். மனுஷர் பெரும்பாலும் தங்கள் தயாளத்தையே பிரசித்தப்படுத்துவார்கள் (நீதி 20:6). தங்கள் பார்வைக்குச் சுத்தமாகத் தோன்றுகிற சந்ததியாருமுண்டு (நீதி30:12). உன்னைப் பார்க்கிலும் நான் பரிசுத்தன் என்று சொல்லுகிறார்கள். இவர்கள் என் கோபத்தாலாகிய புகையும், நாள்முழுவதும் எரிகிற அக்கினியு மாயிருப்பார்கள் (ஏசாயா 65 : 5). நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன (லூக் 6 : 41) . இதோ உன் கண்ணில் உத்திரம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி நான் உன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப் போடட்டும் என்று நீ சொல்வதெப்படி (மத் 7 : 3).




பரிசேயர்கள் ஒருவிதமான தெய்வ பக்தியுடையவர்களாக காணப்பட்டார்கள். ஆனால் அவர்கள் ஜெபித்தார்கள், உபவாசித்தார்கள். மேலும் தசமபாகம் செலுத்திவந்தார்கள். ஆயினும் தங்களுடைய நன்மையானவைகளில்தான் நம்பிக்கை வைத்திருந்தார்களே தவிர மீட்பராகிய கிறிஸ்து இயேசுவின் கிருபையை நினைவுகூரவில்லை. நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லையே (கலா 2 : 16).

**மனுஷருடைய சுயநீதியின் வெளித்தோற்றம்**

தேவஆவியானவரால் அருளப்பட்ட நீதி வாசமாயிருக்கும் மனிதனில் தாழ்மையும், அன்பும் காணப்படும். பரிசேயராகிய நீங்கள் போஜனபான பாத்திரங்களின் வெளிப்புறத்தை சுத்தமாக்குகிறீர்கள் (லூக் 11 : 42 - 44). எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தை போல இருக்கிறது (ஏசாயா 64 : 6). நமது நற்கிரியைகளுக்கான பெலன் தேவனால் அருளப்பட வேண்டும். வெளிப்புறத் தோற்றத்தினாலே மாத்திரம் வாழ்கிற மனுபுத்திரரின் செய்கைகளை அவர் அங்கீகரிப்பதில்லை (ஏசாயா 57 : 12).

**சுயநீதி நம்மை பரலோகத்திற்கு கொண்டுசெல்லாது**

சுயநீதி பல வேளைகளில் ஜனங்களிடையே குருட்டாட்டத்தை உண்டாக்கி, ஆவிக்குரிய வாழ்வில் சரிவை ஏற்படுத்துகிறது. நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல்

நான் ஐசுவரியவானென்றும், திரவிய சம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லை யென்றும் சொல்லுகிற படியால் நீ பார்வையடையும் படிக்கு உன் கண்களுக்கு கலிக்கம் போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன் (வெளி 3 : 17). லவோதிக்கேயா சபை விசுவாசிகள் தங்களை ஆவிக்குரிய ஐசுவரியவான் களாகவும், திரவிய சம்பன்னனாகவும் எண்ணி, மேட்டிமையடைந்ததினால் தேவனுடைய அளவற்ற அன்பை இழந்து, தேவனுடைய பார்வையில் தரித்திரமும், நிர்வாணமும், குருடருமாய் காணப்பட்டார்கள்.

அவர்கள் தேவனை சார்ந்திருப்பதை விட்டுவிட்டு, தங்களுடைய சடங்காச்சார ஒழுங்குமுறைகளுக்கு கட்டுப்பட்டு வாழ்ந்தார்கள். சுயநீதி என்பது பாவம். அது நம்மை பரலோகத்திற்கு கொண்டு செல்லாது. வேதபாரகர், பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் (மத் 5 : 20).

**மனுஷருடைய சுயநீதியின் வெளித்தோற்றம்**

ஒருவர் நியாயப்பிரமாணத்தின் நீதிகளை பின்பற்றி அதன்படி நடந்து, நடை, உடைகளில் மாறி, நன்றாக ஜெபித்து, விசுவாசமாய் ஆராதனையில் ஈடுபட்டாலும் கூட அன்பையும், தாழ்மையையும், தேவனுடைய நீதியையும் தரித்துக் கொள்ளாவிடில் பரலோகபாக்யம் பெறமுடியாது.நியாயப்பிரமாணத்தின் நீதிகளையும் கைக்கொள்ளலாம். இருந்தபோதிலும் இருதயத்தில் நிறைவான பரிசுத்தம் உண்டாகக்கடவது.

**உங்களுடைய நோக்கம் என்ன?**

சுயநீதி என்பது சுயத்தை சார்ந்ததே தவிர, தேவனைச் சார்ந்ததல்ல. நான் கர்த்தர். இது என் நாமம்; என் மகிமையை வேறொருவனுக்கும், என் துதியை விக்கிரகங்களுக்கும் கொடேன் (ஏசாயா 42 : 8). தேவன் தம் மகிமையை அளிக்காவிடில், நாம் தேவ மகிமையற்றவர்களாகி விடுவோம். தூய்மையான தேவனை சத்தமாய் ஆராதிக்கிற ஒரு கூட்ட பெயர்கிறிஸ்தவர்களாலும் பரிசுத்தவான்களாலும் தேவமகிமை என்பது பிதாவாகிய தேவனால் அபிஷேகிக்கப்பட்டு, அதன்மூலம் நம் அன்றாடவாழ்வில் சமாதானம், சந்தோஷம், வல்லமை, அன்பு, தாழ்மையின் குணாதிசயங்களை நமக்குள் கிடைக்கப்பெறுவதே. தன்னைத்தானே புகழுகிறவன் உத்தமனல்ல. கர்த்தரால் புகழப்படுகிறவனே உத்தமன் (2 கொரி 10 : 17-18). இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக்கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்ககடவது (மத் 5 : 16) .

பரிசேயரின் புளித்தமாவைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள். ஒரு தனிமனிதனாவது அல்லது ஒரு கூட்ட ஜனங்களுக்கிடையேயாயினும் இருக்கிற தற்புகழ்ச்சியும், சுயநீதியும் அகற்றப்பட வேண்டும். கர்த்தாவே நாங்கள் தாழ்மையாக வாழவும், எங்களுடைய சுயநீதியை சார்ந்திருக்காமல், இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமையை விசுவாசித்து வாழ உதவி செய்யும்.ஆமென்.

# கேள்விக்கு என்ன பதில்?

**நாம் செய்யும் எவைகள் நம்மை இரட்சிக்கும் நற்கிரியைகளாயிருக்கிறது?**
எபேசி 2 : 8-9 மிக முக்கியமான வேத சத்தியம்.கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல. இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமைபாராட்டதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல. விலைமதிப்பற்ற இரட்சிப்பாகிய மீட்பு இயேசுகிறிஸ்துவின் மூலமாய் மனுஷருடைய

இருதயங்களில் ஊற்றப்பட்டது. இது நம்முடைய சொந்த பலத்தால் உண்டாக் கப்பட்டதல்ல. இது ஆச்சரியமான வேத சத்தியம்.

ஆனால் பலர் வசனம் 10 ல் குறிப்பிடப்பட்டதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். ஏனெனில் நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள்

சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்.பல பெயர்க்கிறிஸ்தவர்கள் தேவனுடைய கிருபையின் ஈவை மறந்து, அவர்களுடைய வேலை, நடத்தை குணாதிசயங்களில் எந்தவொரு மாற்றமுமின்றி வாழ்ந்து வருகிறார்கள். பலர் தேவவார்த்தைக்கு கீழ்ப்படியாமல் போகும்போதுதான் தேவனுடைய கிருபையை தேடுகிறார்கள். மெய்யாகவே இது கிரியைகளினாலே உண்டானதல்ல. நாம் அவைகளில் நடக்க வேண்டும்.

....அக்கிரமத்தை நடப்பிக்கும்படி முன்னே நீங்கள் உங்கள் அவயவங்களை அசுத்தத்திற்கும், அக்கிரமத்திற்கும் அடிமைகளாக ஒப்புக்கொடுத்தது போல, இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுங்கள். (ரோமர் 6 : 19) . அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள் (மத்தேயு 7 : 16-17) என்று இயேசு சொல்கிறார்.அவர்களுடைய நற்கிரியைகள்தான் உள்ளான நல்ல மனுஷன் யார் என அடையாளம் காண உதவும்.

உபவாசத்தினாலாவது, ஜெபத் தினாலாவது, கொடுப்பதினாலாவது, பலியிடுவதினாலாவது, சபைக்கு தவறாக செல்வதினாலாவது அல்லது சேவை செய்வதினாலாவது பரிசுத்தமான இருதயத்தை பெற்றுக் கொள்ள இயலாது. நற்கிரியையே பரிசுத்தமான இருதயத்தின் கனியாகும். தேவனுடைய பரிசுத்தவான்கள் எவ்வாறு தங்கள் நடக்கையிலும், வாழ்விலும் தேவனுக்குப் பிரியமாய் பரிசுத்தமாய் வாழ்ந்தார்கள் என்று வேதாகமம் நமக்கு எடுத்துரைக்கிறது. அவர்கள் பாவமுள்ள இந்த உலகத்தினின்று




மாறுபட்டு, தனித்து தங்களுடைய பழக்கவழக்கங்களிலும், தேவ அர்ப்பணிப்பிலும் மாத்திரமல்ல.தங்களுடைய நடைமுறை வாழ்க்கையிலும் உடையிலும் கூட நேர்த்தியாக செயல்பட்டவர்கள்.

இயேசு கூறுகிறார்: ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான். அவனில் என் பிதா அன்பாயிருப்பார். என்னில் அன்பாயிராதவன் என் வசனங்களைக் கைக்கொள்ள மாட்டான் (யோவான் 14 : 23 -24). கீழ்ப்படிதல் நற்கிரியைகளை கொண்டுவரும். நற்கிரியைகள் மாத்திரம் ஒருவனை காப்பாற்றாது. ஆனால் அதை செய்ய தவறுவதால்இரட்சிப்பை இழக்க நேரிடும். யாக்கோபு தெளிவாக கூறியிருக்கிறார்.

கிரியைகளில்லாத விசுவாசம் செத்தது. தேவன்பேரில் நாம் கொண்டுள்ள விசுவாசத்தின் பலனாக நமக்கு பரிசுத்தவாழ்வு கிடைக்கும்.

நற்கிரியை உங்களில் இல்லாவிடில் அன்பும், விசுவாசமும் நிலைத்திராது. அவர் நம்மை சகல அக்கிரமங் களினின்றும் மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளை செய்ய பக்தி வைராக்கிய முள்ளவர்களாகவும் நம்மை சுத்திகரிக்கும்படி நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார் (தீத்து 2 : 11- 14) .

நற்கனி கொடுக்கும் பரிசுத்தவாழ்க்கை வாழ்ந்து சகல நல்லொழுக்கத்திலும், நீதியிலும் தேவனுக்கு முன்பாகப் பிழையற்றவர்களாய் ஜீவிப்போம். ஒருவருடைய கிரியைகள் மாத்திரமே ஒருவர் இரட்சிப்படைய வழி என்று கூறமுடியாது.மாறாக தேவனோடு உள்ள ஐக்கியத்தை வலுப்படுத்த அது உதவி செய்யும்.

**நானே இரட்சிப்புக்கு வழி என்று சொல்லுகிற சபைகளைக் குறித்து என்ன கூறப்படுகிறது?**

இயேசு அவர்களை நோக்கி நானே வாசல். என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான் (யோவான் 10 : 9). ஒரு மனிதனாலும், சபையாலும், ஊழியக்காரராலும், எவராலும் ஒருவருக்கு இரட்சிப்பை தர இயலாது. நாமே இரட்சிப்பை பெற்றுக்கொள்ள சொந்த பலத்தால் கூடாது.

ஆகவே கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அருளிய இரட்சிப்பு என்பது அவருடைய சொல்லி முடியாத அன்பின் ஈவு

சுயநீதியும், ஆவிக்குரிய மனமேட்டிமையுமே சில சபைகளில் பெருகி, அதினிமித்தம் கர்த்தரை விட்டுவிட்டு சபையின் பெயராலே இரட்சிப்பு வழங்கும் பல சபைகள் இன்று பெருகியுள்ளன. பாவத்திலிருந்து மீட்கப்பட்டோர் அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்திரவான்களாய் கூடிவருகிற ஒரு இடம்தான் சபை. அன்றியும் சகோதரரே நீங்கள் கற்றுகொண்ட உபதேசத்திற்கு விரோதமாய் பிரிவினைகளையும், இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து அவர்களை விட்டு விலக வேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன் (ரோமர் 16 : 17) .

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide
Indian Constitution Act 25th & 19(1) Section
TAMIL EDITION - FOR PRIVATE CIRCULATION ONLY

**உங்களுக்குத் தெரியுமா?**

*நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள் போல இருக்கிறோம்; எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தை போல இருக்கிறது – ஏசாயா 64 : 6.*

*இஸ்ரவேலர்கள் மிகுதியான தர்மங்களையும், பலிகளையும், துதியையும் செலுத்தியபோதும்கூட பல நேரங்களில் அவர்களை தேவன் அருவருப்பாக எண்ணுவதற்கு காரணம் யாதெனில் அவர்கள் பாவத்தோடு ஒன்றற கலந்து சுகபோகமாய் ஜீவித்தனர்.*

*அவர்களுடைய நீதி கந்தை போன்றது. வெளித்தோற்றத்திலே தயாள குணம் படைத்தவர்கள்தான் உண்மையில் அழுக்கற கழுவப்படாதவர்களாக இருக்கிறார்கள். “ கந்தை ” என்பது எபிரெய பாஷையிலே “ தீட்டானது ” என பொருள்படும்.*

ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை

## நான் உனக்கு கற்பிக்கும் வார்த்தையை பிரசங்கி

நீ எழுந்து, மகா நகரமாகிய நினிவேக்குப் போய், நான் உனக்குக் கற்பிக்கும் வார்த்தையை அதற்கு விரோதமாய்ப் பிரசங்கி என்றார் – யோனா 3 : 2

கர்த்தருடைய வார்த்தை யோனா தீர்க்கதரிசிக்குச் சொல்லப்பட்டது அது நினிவேக்கு விரோதமான வார்த்தை.ஆகவே அதை வெளிப்படுத்த மற்றும் தீர்க்கதரிசிகள் தயங்கலாம். அங்குள்ள ஜனங்கள் அதை விரும்பாமல் போகலாம். உன்னை அவர்கள் அங்கீகரிக்காமல் இருக்கலாம். சிலசமயம் பட்டணத்தைவிட்டு நீங்கள் துரத்தப்படலாம். ஆயினும் நீ விசுவாசமுள்ளவனாயிரு. உன்னுடைய சொந்த கருத்தையோ, கொள்கையையோ போதிக்காமல், தேவனுடைய ஆவி உங்களை என்ன சொல்லும்படி ஏவுகிறதோ, அதை தேவஅன்போடும், நீதியோடும் தைரியமாய் பிரசங்கியுங்கள்.

ஒரு ஆடு எப்போதும் நன்மையானதையே வாஞ்சிக்கும்படி போதிப்பது மாத்திரம் ஒரு ஊழியரின் வேலையல்ல.உற்சாகமும், ஆசீர்வாதமும் நிறைந்த வார்த்தைகளை போதிப்பதற்கு ஒரு காலமுண்டு.



ஆனால் விசுவாசிகளுடைய ஆவிக்குரிய வளர்ச்சி நம்முடைய கண்டிப்பான போதனையில் அடங்கியிருக்கிறது. சில காரியங்களைக் குறித்து வெளிப்படையாக போதிக்காவிடில் எப்படி ஊழியத்தில் வளர்ச்சி அடையமுடியும்?

ஒவ்வொரு உண்மையான தேவஊழியருடைய வாயையும் கட்டும்படியாய் சாத்தான் வகைதேடி திரிகிறான்.நீங்கள் அதை போதிப்பீர்களாகில் அந்த மனிதன் எரிச்சலுறலாம். சிலர் ஏற்றுக் கொள்ளாமல் போகலாம். சில காரியங்களை குறித்துப் பேசுவதற்கென ஒருபோதும் காலதாமதம் செய்யாதீர்கள். நாம் என்ன செய்ய அவரது சித்தம்? நாம் முழங்காலில் நிற்க காரணம் என்ன? நாம் எதை போதிக்க வேண்டும்?

கர்த்தருடைய வார்த்தையை போதியுங்கள். சத்தியத்தை போதியுங்கள். கர்த்தர் உங்களை அழைத்த அழைப்புக்கு கீழ்படிந்து, அதற்கு பாத்திரவான்களாய் ஜாக்கிரதையாய் திருவசனத்தை பிரசங்கியுங்கள். மனுஷனுக்கு பயப்படாதேயுங்கள். உங்களுடைய பதவியைக் குறித்து பயப்படாதீர்கள். மற்ற யாரையும் குறித்து பயப்பட வேண்டாம்.நாம் தனிமையாய் நின்ற பல வேளைகளிலும் கூட கர்த்தர் உங்களோடும், என்னோடும் இருந்து நம்மை ஆற்றி, தேற்றி அரவணைத்து காத்து வழிநடத்தி வருவார். நம்பிக்கையின் வழிகாட்டியாகிய வேதசத்தியத்தைக் கொடுத்து தாங்குவார்.

**தொடர்புக்கு:-**
ஆசிரியர்,
காஸ்பல் ட்ருத்
தேவசபை வெளியீடு
2/227 – கோலார்பட்டி
பொள்ளாச்சி வட்டம்
தென் இந்தியா - 642 107

The Editor,
Gospel Truth,
Church of God Publication
2/227 - Kolarpatti
Pollachi Taluk
South India - 642 107.

Email :
editor@thegospeltruth.org

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

Tamil Editor : W.S.Vedha, Church of God, 2/227 Kolarpatti, Pollachi -Taluk,South India - 642 107.
Phone : 04259 - 280488 Cell: 95975 62641
Publisher : V.Jayanathan Gnanarajan, Mailing : V.Selvam, Despatch : V.J.Sam kirubaharan
Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316